தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கிருஷ்ணா நதி நீர் வரத்து அதிகரிப்பு பூண்டி ஏரியின் நீர் மட்டம் உயருகிறது



ஊத்துக்கோட்டை,

கிருஷ்ணா நதி நீர் வரத்து அதிகரித்து வருகிறது.

<u>நதி நீர் பங்கீட்டு திட்டம்</u>

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்ற தமிழக – ஆந்திர அரசுகள் செய்து கொண்ட கிருஷ்ணா நதி நீர் பங்கீடு திட்டத்தின்படி ஆண்டுதோறும் 12 டி.எம்.சி. தண்ணீரை ஆந்திர அரசு தமிழ்நாட்டுக்கு திறந்து விட வேண்டும். அதன்படி கண்டலேறு அணையில் இருந்து 10–ந் தேதி திறந்துவிடப்பட்ட கிருஷ்ணா நதிநீர் 13–ந் தேதி பூண்டி ஏரியை வந்தடைந்தது.

கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு 1500 கனஅடி விதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.


பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. 3ஆயிரத்து 231 மில்லியன் கனஅடி தண்ணீரை சேமித்து வைக்க முடியும். நேற்று மாலை 5 மணி நிலவரப்படி 17.90 அடி நீர் மட்டம் பதிவானது. 87 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

கிருஷ்ணா நதி நீர் வரத்தால் பூண்டி ஏரியின் மட்டம் சற்று அதிகரித்து வருகிறது. 13–ந் தேதி 17.66 அடியாக இருந்த நீர் மட்டம் 14–ந் தேதி 17.71 அடியாகவும் 15–ந் தேதி 17.82அடியாகவும், 16–ந் தேதி 17.90 அடியாகவும் உயர்ந்தது.

13–ந் தேதி வினாடிக்கு 13 கனஅடியாக இருந்த நீர் வரத்து 14–ந் தேதி 55 கனஅடி, 15–ந் தேதி 75 கனஅடியாக இருந்தது, இது நேற்று 87 கன அடியாக உயர்ந்தது.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 55.89 அடி



சேலம்,

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 55.89 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 271 கன அடியாகவும் அணையில் இருந்து நீர் வெளியேற்றம் 6 ஆயிரம் கன அடியாகவும் உள்ளது. அணையின் கொள்ளளவான 93.4 டி.எம்.சி. அளவில் தற்போது நீர் இருப்பு 21.722 டி.எம்.சி. ஆக உள்ளது. இத்தகவலை பொது பணி துறையினர் தெரிவித்துள்ளனர்.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## உழவர் சந்தையில் 600 டன் காய்கறி விற்பனை : நுகர்வோருக்கு பயன், விவசாயிகளுக்கு லாபம்

கோவை : கோவை மாவட்டத்தில், ஏழு உழவர் சந்தைகளில், மூன்று நாட்களில் 600 டன் காய்கறிகள் விற்பனையானது. இதனால் விவசாயிகள் லாபம் அடைந்ததோடு, நுகர்வோரும் பயன்அடைந்துள்ளனர்.

கோவையில் ஆர்.எஸ்.புரம், சிங்காநல்லூர், சுந்தராபுரம், குறிச்சி ஆகிய <உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகிறது. விவசாயிகள், தங்கள் நிலங்களில் விளையும் காய்கறிகளை நேரடியாக இங்கு விற்பனை செய்வதால், வாடிக்கையாளர்களுக்கு வெளிமார்க்கெட்டை விட, குறைந்த விலையில் கிடைக்கிறது. வழக்கமாக, <<காலை

நேரங்களில் உழவர் சந்தைகளில் அதிகளவில் கூட்டம் காணப்படும். பொங்கல் தினத்தை முன்னிட்டு வழக்கத்தை விட அதிகமாக வாடிக்கையாளர்கள் வந்ததால், காய்கறி விற்பனை அதிகரித்துள்ளது.ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில், தினந்தோறும் சராசரியாக 75 டன் காய்கறிகள் விற்பனையாகும். பொங்கலை முன்னிட்டு எதிர்பாராத அளவுக்கு விற்பனை அதிகரித்துள்ளது. கடந்த 11 ம் தேதி 94 டன்னும்,

12ம் தேதி 103 டன்னும், 13ம் தேதி 98 டன்னும் காய்கறி விற்பனையானது. மூன்று நாட்களும் சேர்த்து மொத்தம் 300 டன் காய்கறிகளை விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்துள்ளனர்.

கடந்தாண்டு பொங்கல் தினத்தில் காய்கறி விளைச்சல் குறைவால், அதிக விலைக்கு விற்கப்பட்டன. ஆனால் இந்தாண்டு, அதிக விளைச்சல் காரணமாக காய்கறி லோடு வரத்து, அதிகரித்தது. இதனால், அனைத்து காய்கறிகளும் குறைவான விலைக்கு விற்கப்பட்டதால், விற்பனை அதிகரிக்க காரணமாக இருந்தது; விவசாயிகளுக்கும் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைத்தள்ளது.

பொங்கல் தினத்துக்கு முன் , மூன்று நாட்களிலும் ஆர்.எஸ். புரம் உழவர் சந்தையில் மட்டும், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் காய்கறிகள் வாங்கி சென்றுள்ளனர். மொச்சை, துவரை, அரசாணிக்காய், அவரை, தேங்காய், வாழைக்காய், பூசணிக்காய், மஞ்சள், எலுமிச்சை, வாழை இலை, தேங்காய், கதளி வாழைப்பழம் அதிகளவில் விற்பனையானது. கரும்பு 25 டன் விற்பனையாகியுள்ளது. முதலில் கரும்பு அதிக விலைக்கு விற்கப்பட்டது. கரும்பு வரத்து அதிகரிக்கவே, விலையும் படிப்படியாக குறைந்தது.

இதனால், கரும்பு விவசாயிகளுக்கு எதிர்பார்த்த அளவுக்கு, லாபம் கிடைக்கவில்லை. வேளாண்மை அதிகாரி ஒருவர் கூறுகையில், "கோவை நகரில் நான்கு இடங்களிலும், புறநகரில் வடவள்ளி, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களிலும் உழவர் சந்தைகள் உள்ளன. ஏழு உழவர் சந்தைகளில், தினமும் சராசரியாக 150 டன் காய்கறிகள் விற்பனையாகிறது. பொங்கலை முன்னிட்டு, ஒரு நாளைக்கு 200 டன் விகிதம், சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் 600 டன்னுக்கு காய்கறிகள் விற்பனையாகி உள்ளன. இதனால் விவசாயிகளுக்கு லாபம் கிடைத்துள்ளதோடு, நுகர்வோரும் பயன் அடைந்துள்ளனர்' என்றார்.

### இந்தாண்டு வறட்சியில் இருந்து தப்ப முடியுமா?... பருவமழை ஏமாற்றியதால் விபரீதம்

கோவை : கோவை மாவட்டத்தில், கடந்தாண்டு "கொட்டித்தீர்க்கும்' என எதிர்பார்த்த, தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை, லேசாக தூறல் போட்டு, ஏமாற்றியது. இந்தாண்டு பருவமழை தவறாமல் பெய்தால் மட்டுமே, வறட்சியிலிருந்து தப்ப முடியும்

என்ற நிலை உருவாகியுள்ளது.மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில், பசுமை சூழலில் அமைந்துள்ள கோவை மாவட்டத்தில் வறட்சி எட்டிக்கூட பார்த்ததில்லை. மலையில் ஊற்றெடுத்த நொய்யல், பாலாறு, ஆழியாறு ஆறுகள் மாவட்டம் முழுவதும் பரவி ஓடியது. நெல், கரும்பு, வாழை, மஞ்சள், பருத்தி, பயிர் சாகுபடி என ஆண்டு முழுவதும் விவசாயம் நடந்தது.

இயற்கை முரணான செயல்பாடுகளாலும், நகரப்பகுதியில் இருந்து மரங்களை வெட்டி வீழ்த்த துவங்கியதன் விளைவாகவும், மழை பொழிவு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஆண்டில், ஏழு மாதங்கள் பெய்த மழை, ஓரிரு மாதங்கள் மட்டுமே பெய்கிறது.

வேளாண் வானிலை மையம், ஒவ்வொரு ஆண்டும், "எதிர்பார்க்கும் மழை கிடைக்கும்; நிலத்தடி நீர்மட்டம் உயரும்' என்ற நம்பிக்கை அறிவிப்பை வெளியிடுகிறது. ஆனால், நிதானமாக நின்று பொழியும் பருவமழை பெய்வதே இல்லை. கடல் பகுதியில் ஏற்படும் காற்றழுத்த தாழ்வு நிலையால், திடீரென மழை கொட்டத்துவங்கி, உடனே நின்றும் விடுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாக, கோவையில் இப்படித்தான் மழை பெய்கிறது.

வேளாண் வானிலை கணக்குப்படி மழையளவு பதிவாவது போன்றிருந்தாலும், ஒரே நாளில் கொட்டித்தீர்க்கும் மழையால், நிலத்தடி நீர்மட்டம் உயருவதற்கு உதவுவதில்லை. கடந்தாண்டு ஒட்டுமொத்தமாக கணக்கிடும்போது, தென்மேற்கு பருவமழை 45 நாட்கள் மட்டுமே பெய்ததாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதனால், மலைத்தொடரில் <<உள்ள சிறுவாணி, சோலையாறு, பரம்பிக்குளம், ஆழியாறு அணைகள் நிரம்பின.அதைத்தொடர்ந்து, வடகிழக்கு பருவமழை கைகொடுக்காததால், அணைகள் இரண்டாவது முறையாக நிரம்பவில்லை. சிறுவாணி அணை, கடந்த ஆகஸ்ட் மாதம் நிரம்பியதால், கோவை பெரிய குளம் வரை தண்ணீர் வந்து, குளங்கள் நிரம்பின.

தற்போது, அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. சோலையாறு, பரம்பிக்குளம், ஆழியாறு அணைகளில் ஜூன் வரையிலும் நீர் இருப்பு இருக்கும். சிறுவாணி அணையில் இருந்து குடிநீர் தேவைக்கு தினமும் 101 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுப்பதால், ஜூன் வரை மட்டுமே தண்ணீர் தாக்குப்பிடிக்கும்.கடந்தாண்டு எதிர்பார்ப்புடன் காத்திருந்த நிலையில், பருவமழைகள் ஏமாற்றியதால், இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே நிலத்தடி நீர்மட்டம் சரிந்து, விவசாய பகுதிகளில் வறட்சியான நிலை நிலவுகிறது. இந்தாண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழைகள் தீவிரமாக பெய்தால் மட்டுமே, வறட்சி ஏற்படுவதை தவிர்க்க முடியும். நிலத்தடி நீர்மட்டம், விவசாயம் மற்றும் குடிநீர் ஆதாரங்களை பாதுகாக்க முடியும்.பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், "இயற்கைக்கு செய்த மாபெரும் துரோகத்தை உணர்ந்து, இப்போது மக்கள் மரம் வளர்க்க துவங்கியுள்ளனர். மக்களின் தவறுக்கு இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு மழை தண்டிக்கப்போகிறது என்பது தெரியவில்லை. கடந்தாண்டு மலைப்பகுதியில்

எதிர்பார்ப்பில் 60 சதவீதமும், சமவெளிப்பகுதியில் 20 சதவீதமும் மழை பெய்தது. இந்தாண்டு, பனிப்பொழிவு, சீதோஷ்ண நிலையில் நிறைய மாற்றங்கள் காணப்படுகின்றன. இதனால், இந்தாண்டு மழை பொழிவு எப்படி இருக்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளது' என்றனர்.

### தர்பூசணி சாகுபடி: விவசாயிகள் ஆர்வம்

மரக்காணம்: மரக்காணம் பகுதி விவசாயிகள் தர்பூசணி சாகுபடி செய்வதில் ஆர்வமாக உள்ளனர்.மரக்காணம் அருகே உள்ள கந்தாடு, புதுப்பாக்கம், முதலியார்பேட்டை, திருக்கனூர், நடுக்குப்பம், கோட்டிக்குப்பம், வண்டிப்பாளையம் ஆகிய கிராம விவசாயிகள் 3 ஆயிரம் ஏக்கரில் தர்பூசணி பயிர் செய்துள்ளனர்.

தற்போது களை எடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தர்பூசணி காய்கள் முற்றியதும் பல்வேறு மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் வந்து மாதக் கணக்கில் தங்கி காய்களை வாங்கி சென்னை மற்றும் ஆந்திரா,கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.ஆண்டு தோறும் விவசாயிகளுக்கு கணிசமான லாபம் கிடைப்பதால் மணிலா, நெல், கரும்பு பயிரிட்டு நஷ்டமடைந்த விவசாயிகள் பலர் தர்பூசணி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர்.

### விவசாய நிலங்களில்களையெடுக்கும் பணி

மூங்கில்துறைப்பட்டு: மூங்கில்துறைப்பட்டு அடுத்த வடபொன்பரப்பில் சம்பா நெல் பயிரில் களை எடுக்கும் பணி நடந்தது.வடபொன்பரப்பி பகுதியில் போதிய மழை பெய்ததால் விவசாயிகள் சம்பா நெல் பயிரிட்டனர். அந்த நெற் பயிர்கள் செழிப்பாக உள்ளது. இதற்கிடையில் விவசாய நிலங்களில் களையெடுக்கும் பணியில் அந்த பகுதியை சேர்ந்தவர்கள் ஈடுபட்டனர். சென்ற ஆண்டை விட சம்பா நெல் மூலம் அதிக லாபம் பெறுவோம் என்று விவசாயிகள் கூறினர்.

### பருவமழை ஏமாற்றியதால் விவசாயிகள்... 75 ஆயிரம் ஏக்கர் கரும்பு கருகும் அபாயம்

தியாகதுருகம்: பருவமழை ஏமாற்றியதால் நிலத்தடி நீர் குறைந்து வரும்நிலையில் கள்ளக்குறிச்சி பகுதியில் 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். கடந்த ஆண்டை போல் கரும்பு பயிர் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கரும்பிற்கு தீவைப்பு:கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், ரிஷிவந்தியம், சின்னசேலம் உள்ளிட்ட பகுதியில் 75 ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுக்கு முன்பு கரும்பு பதிவு கிடைக்காம லும், போதிய விலை கிடைக்காமல் கரும்பு சாகுபடி செய்த பலர் பயிரை தீயிட்டு கொளுத்தினர்.தனியார் சர்க்கரை ஆலை

வரவு, கரும்புக்கு கொள்முதல் விலை உயர்வு ஆகிய காரணங்களால் கரும்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். இதனால் நெல் சாகுபடி பரப்பு குறைந்து கள்ளக்குறிச்சி பகுதியில் கரும்பு பயிர் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பராமரிப்பு சிரமம் குறைவாக இருப்பதாலும் ஆண்டுக்கு ஒரு முறை நிகர லாபம் கிடைப்பதால் கரும்பு பயிர் மீது விவசாயிகளுக்கு மோகம் அதிகரித்தது.ஆண்டு பயிராக உள்ள கரும்பு சாகுபடிக்கு போதிய நீர்வளம் அவசியமாகும். ஆண்டு தோறும் அளவான தண்ணீர் பாய்ச்சி பராமரித்தால் மட்டுமே நல்ல லாபம் பெறமுடியும். இதனால் குறிப்பிட்ட மாதங்களுக்கு மட்டுமே தண்ணீர் கிடைக்கும். அணை, ஏரி பாசனம் மூலம் கரும்பு சாகுபடி செய்ய இயலாது. இதற்கு கிணற்று நீர் பாசனம் அவசியமாகும். குறிப்பாக கோடைகாலத்தில் கரும்பு பயிர்கள் கருகாமல் கிணற்று நீர் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது.

25 ஆயிரம் ஏக்கர்:இந்நிலையில் கடந்த 2012 ம் ஆண்டு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் ஏமாற்றியதால் கடந்த ஆண்டு கோடையில் கரும்பு பயிர்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்காமல் கருகியது. இதனால் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம் தாலுக்காவில் 25 ஆயிரம் ஏக்கர் கரும்பு காய்ந்து நஷ்டம் ஏற்பட்டது.இதனால் விவசாயிகள் கடுமையாக பாதித்தனர். இந்நிலையில் கடந்த ஆண்டும் பருவமழை எதிர் பார்த்த அளவு பெய்யவில்லை. வழக்கமான அளவை விட 33 சதவீதம் மழை குறைவாக பெய்துள்ளது. கோமுகி, மணிமுக்தா அணைகள் நிரம்பவில்லை. தடுப்பணை, ஏரி, குளங்கள் தண்ணீரின்றி வறண்டன.

கலக்கம்:நீர்நிலைகளில் தண்ணீர் தேங்காததால் நிலத்தடி நீர்மட்டம் உயர வழியின்றி வேகமாக குறைந்து வருகிறது. இதனால் கோடை காலம் துவங்கும் முன் கிணற்றில் தண்ணீர் குறையும் அபாயம் உள்ளது. எப்படியும் பருவமழை பெய்யும் என்று நம்பிக்கையுடன் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.வறட்சி காரணமாக கரும்பு பயிர்கள் காய்ந்து நஷ்டம் ஏற்படுவதை தடுக்க மழையை எதிர்பார்த்தும் பலனின்றி போயுள்ளது. கடந்த இரு ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால் வரும் கோடையில் கடும் வறட்சி நிலவும் என்பதால் கரும்பு பயிரை காப்பாற்றுவதற்கு மிகுந்த சிரமம் ஏற்படும் என்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## ஆண்டிபட்டி பகுதியில் 5 ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி வைகையில் நீர் வந்தாலும் வாய்க்காலில் தண்ணீர் இல்லை

தேனி: வைகை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட சூழ்நிலையிலும் துரைச்சாமிபுரம் அணைக்கட்டில், மண் அடைத்துக் கொண்டதால் வாய்க்காலில் நீர் திறக்க முடியவில்லை. இதனால் 5 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பகுதியில் <உள்ள மரிக்குண்டு பொம்மையசாமி, புதுக்குளம் , பாலசமுத்திரம் நல்லடிச்சேரி, ரங்கசமுத்திரம் கிலிச்சியம்மன் ஆகிய கண்மாய்களுக்கு வருஷநாடு வைகை ஆற்றில் இருந்து, ஆத்தாங்கரைப்பட்டி கால்வாய் வழியாக நீர் திறக்கப்படவேண்டும். மேகமலையில் பெய்த மழையால், வைகை ஆற்றில் சில நாட்களாக லேசான நீர் வரத்து உள்ளது. ஆனால், துரைச்சாமிபுரம் அணைக்கட்டில் மண் அடைத்துக் கொண்டதால், வாய்க்காலில் நீர் திறக்க முடியவில்லை.

இந்த வாய்க்காலில், நீர் திறக்கப்பட்டால் நேரடியாக 900ம் ஏக்கரும், கண்மாய் பாசனம் மூலம் 4 ஆயிரம் ஏக்கரும் பாசன வசதி பெறும். தவிர 20 கி.மீ.,தூரத்திற்கு நிலத்தடி நீர் மட்டம் உயரும். இப்பகுதியில் உள்ள கிணறுகளில் நீர் ஊற்று கிடைக்கும். எனவே இறவை சாகுபடி நிலங்களும் பயன் பெறும்.

நடப்பு ஆண்டு, மழை குறைவாக பெய்துள்ள நிலையில், ஆற்றில் நீர் வரத்து குறைவாக உள்ளதால், அணைக்கட்டில் தடுப்பணை மூலம் தண்ணீர் தேக்கி வாய்க்காலில் நீர் திறப்பார்கள், என விவசாயிகள் எதிர்பார்த்தனர்.ஆனால் ஒரு சொட்டு நீர் கூட வாய்க்காலில் வரவில்லை.விவசாயிகள் கூறுகையில், ""கால்வாய் மூலம் நீர் வரத்து கிடைத்தால், நெல் நடவு செய்திருக்க முடியும். ஆனால், நீர் இன்னும் வராததால் என்ன பயிர் சாகுபடி செய்யலாம் என்று தெரியவில்லை. விவசாயிகள் பலரும் தங்கள் நிலங்களில் சோளம், மக்கா சோளம், கம்பு, பயறு வகைகளை விதைப்பு செய்துள்ளனர். 20 ஆண்டுகளாக இதே நிலை தான் தொடர்கிறது. நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை. துரைச்சாமிபுரம் அணைக்கட்டில் மணல்வாரி கட்டினால் வாய்க்காலில் மண் அடைப்பது தடுக்கப்படும். இதன் மூலம் நீர் வரத்து கிடைக்கும். ஆனால் விவசாயிகள் இதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை. இதனால் நடப்பு ஆண்டு விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில்,""கண்மாயில் ஏற்கனவே தண்ணீர் வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது. கால்வாயை ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே செப்பனிட்டு மராமத்து செய்ய அரசு நிதி ஒதுக்குகிறது. இந்த ஆண்டு கால்வாயில் உள்ள செடிகொடிகளை முன்கூட்டியே அகற்றுவதற்கு விவசாயிகள் ஒத்துழைக்கவில்லை. இதனால் தற்போது பாதிப்பு ஏற்பட்டுள்ளது' என்றனர்.

**அணைகளின் நீர்மட்டம்**

கூடலூர்: அணைகளின் நீர் மட்டம் வருமாறு: பெரியாறு அணை: நீர்மட்டம் 113 (136) அடி. நீர்வரத்து இல்லை. தமிழகப்பகுதிக்கு நீர்திறப்பு 344 கன அடி. நீர் இருப்பு 1392 மில்லியன் கன அடியாகும்.*வைகை அணை: 35.50 (71) அடி. நீர்வரத்து 211 கன அடி, நீர்திறப்பு 60 கன அடி, நீர் இருப்பு 636 மில்லியன் கன அடியாகும். *மஞ்சளாறு அணை: நீர்மட்டம் 36.25 (57) அடி. நீர்வரத்து 1 கன அடி, நீர்

திறப்பு 8 கன அடி, நீர் இருப்பு 140.95 மில்லியன் கன அடியாகும்.

*சோத்துப்பாறை அணை: நீர்மட்டம் 103.64 (126.28)அடி. நீர்வரத்து இல்லை.

நீர்திறப்பு 40 கன அடி. நீர் இருப்பு 65.54 மில்லியன் கன அடியாகும்.

**விலங்குகளால் பாதித்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வழங்கல்**

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூரில், விலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில், நஷ்ட ஈடுவழங்கப்பட்டது. மாவட்ட வனத்துறை சார்பில், விவசாயிகள் குறை தீர் கூட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வன விரிவாக்க மையத்தில் நடத்துவது வழக்கம். தற்போது, செண்பக தோப்பு வனப்பகுதி அருகே, பேச்சியம்மன் கோயில் பகுதியில் நடந்தது. மண்டல வன பாதுகாவலர் வெங்கடேஷ் தலைமை வகித்தார். மாவட்ட வன உயிரின காப்பாளர் அசோக்குமார், வனச்சரக அதிகாரிகள் பாண்டிராஜ், உயிரியலாளர் பார்த்தீபன் உட்பட வனத்துறை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.வனவிலங்குகளால், விளை நிலங்கள் சேதமடைந்த 20 விவசாயிகளுக்கு, 2லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்கப்பட்டன. ஒற்றை யானை, மான், காட்டு பன்றிகளால் விளை நிலங்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாக,விவசாயிகள் கூறினர். "யானையை விரட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு, அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், யானைகள், விளை நிலங்களுக்குள் வராமல் தடுக்க, அகழிகள் வெட்டப்பட உள்ளதாக," மண்டல வன பாதுகாவலர் வெங்கடேஷ் தெரிவித்தார்.

**கானாங்காடு பகுதியில்வள்ளிக்கிழங்கு விளைச்சல்**

மூங்கில்துறைப்பட்டு: மூங்கில்துறைப்பட்டு அடுத்த கானங்காடு பகுதி யில் சர்க்கரை வள்ளி கிழங்கு அமோகமாக விளைச்சலால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.மூங்கில்துறைப்பட்டு அடுத்த கானங்காட்டில் சம்பா நெல் பயிருக்கு மாற்று பயிராக சர்க்கரை வள்ளி கிழங்கு பயிரிட்டனர். விவசாயிகள் எதிர்பார்த்ததைவிட விளைச்சல் அமோகமாக உள்ளது. இதன் மூலம் அதிக லாபம் கிடைக்கும் என தெரிவித்தனர்.

**கம்பம் பள்ளத்தாக்கில் 2ம் போகத்தை காப்பாற்ற முல்லைபெரியாறு அணையில் கூடுதல் தண்ணீர் திறக்க எதிர்ப்பு கலெக்டரை சந்திக்க விவசாயிகள் முடிவு**

உத்தமபாளையம், : கம்பம் பள்ளத்தாக்கில் சுமார் 14,707 ஏக்கர் பரப்பில் இரண்டுபோக நெல் விவசாயம் நடக்கிறது. முதல்போகம் இயற்கையின் கருணையால் அறுவடை செய்யப்பட்டுள்ள நிலை யில் கூடலூர் தொடங்கி பழனிசெட்டிபட்டி வரை தற்போது இரண்டாம் போகத்திற்கு நடவுபணி முடிந்துவிட்டது. கம்பம், கூடலூர், உத்தமபாளையம், சின்னமனூர், குச்சனூர், கோட்டூர் என அனைத்து ஊர்களிலும் தற்போது இரண்டாம் போகத்திற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். பெரியாறு அணையில் வழக்கமாக பெய்ய வேண்டிய மழை இந்த வருடம் இல்லை. இதனால் எதிர்பார்த்த அளவிற்கு தண்ணீர் மட்டம் உயரவில்லை. கடந்த மாதம் 4ம் தேதி கம்பம் பள்ளதாக்கு நீரினைப்பயன்படுத்துவோர் சங்கம் சார்பில் நடந்த கூட்டத்தில் பெரி யாறு அணையில் இருந்து 800 முதல் 900 கனஅடி தண்ணீர் தினமும் திறக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.
இந்நிலையில் மதுரை மாவட்டம் மேலூர் பகுதி விவசாயிகள் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில் தங்கள் பகுதி விவசாயம் காப்பாற்றப்பட வேண்டும் என்று வழக்கு தொடர்ந்ததன் அடிப்படையில் தற்போது வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இன்று(13ம் தேதி) வரை வைகை அணையில் இருந்துதண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே தற்போது பெரியாறு அணையில் நேற்று முன்தினம் வரை 344 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. நேற்று இது அதிகரிக்கப்பட்டு 467 கனஅடியாகஉயர்த்தப்பட்டுள் ளது. இதனால்

அணையின் நீர்மட்டம் சரிவை சந்தித்து தற்போது 113.90 அடியாக உள்ளது.இந்த நிலை நீடிக்கும்பட்சத்தில் இரண்டாம்போக விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. தற்போதைய விவசாயநிலை குறித்து பேசுவதற்காக கம்பம் பள்ளதாக்கு நீரினைபயன்படுத்துவோர் சங்கத்தின் ஆலோசனைக்கூட்டம் துணைத்தலைவர் கம்பம் நாராயணன் தலைமையில் நடந்தது. முன்னாள் எம்.எல்.ஏ. ஜெயராமன், செயலர் சகுபர்அலி, ஹாஜியார் முகமதுமீரான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் எடுக்கப்பட்ட முடிவுகள்: கம்பம் பள்ளதாக்கில் தற்போது இரண் டாம் போகத்திற்கான நடவுப்பணி முடிந்துவிட்டது. பெரியாறு அணையின் நீர்மட்டம் கிடுகிடு என குறைந்துவருகிறது. அணையின் நீர்மட்டம் குறைந்துள்ளதால் வரக்கூடிய இரண்டாம்போகத்திற்கு 60 நாட்களுக்கு மேல் தண்ணீர் தேவைப்படுகிறது. எனவே பெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அள வை குறைக்க வேண்டும். இதனை வலியுறுத்தும் வகையில் இன்று (13ம் தேதி) தேனி கலெக்டரை விவசாயிகள் சந்திப்பது என்று முடிவு செய்யப்பட்டது. தொடர்ந்து குறைக்காவிட்டால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளை திரட்டி போராட்டங்கள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

### தை திருநாளையொட்டி கரும்பு அறுவடை தீவிரம் வெளி மாவட்டத்தில் உற்பத்தி குறைவால் கடும் கிராக்கி

சின்னமனூர், : தை பொங்கலையொட்டி கருப்பு கரும்பு அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. வெளிமாவட் டங்களில் உற்பத்தி குறைவால் சின்னமனூர் கரும்பிற்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சின்னமனூரில் முல்லைபெரியாற்றின் பாசனத்தால் 4 ஆயிரம் ஏக்கர் வயல் வெளிகளில் இரு போகம் நெல் சாகுபடியை தொடர் விவசாயமாக விவசாயிகள் செய்து வருகின்றனர். இன்னொரு பக்கம் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கரில் வருடத்தில் ஒருமுறை வரும் தை திருநாளுக்காக சிறப்பு கருப்பு கரும்பாக விளை வித்து எடுக்கின்றனர். கடந்த 20 ஆண்டுக்கு முன்பு நாட்டு வகையை சேர்ந்த ராமகரும்பு, ரஷ் தாளி வகையான கரும்புகள் விளைவித்து எடுக்கப்பட்டன. இக் கரும்பு வகை கள் சரியாக ஒரு வருடம் ஆயுள் கொண்டது. சுமார் 15 அடி உயரமாக வளரும், கனுக்கள் மிகவும் குறைவாக இருக்கும். நல்ல சுவை யாகவும் தோல் லேசாகவும் இருக்கும். ராமகரும்பு என் பது வரிகளாக இருக்கும். ரஷ்தாளி கரும்பு என்பது பச்சையாக இருக்கும். இரண்டும் ஒரே சுவையாக இருக்கும். அந்த காலக்கட்டத்திலும் தை பொங்கலுக்காக தமிழகம் முழுவ தும் பல பகுதிகளுக்கு சின்னமனூரிலிருந்து கரும்புகள் செல்லும். வேளாண்மை துறையினரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஹைபிரிட் வகை யான கருப்பு விதை கரும்பு வந்த பிறகு ராமகரும்பு, ரஷ்தாளி கரும்புகள் படிப்படியாக குறைந்து காணா மல் போய்விட்டன. இக் கரும்பின் ஆயுள் 8 மாதமா கும். ஏக்கருக்கு 4 ஆயிரத்து 500

விதைக் கருனைகள் நடவு செய்யப்படும். கரும்பை வளர்ப்பதற்கு நான்கு முறை உரம் வைக்கப்படுகிறது. வெள்ளை வண்டுகள் தாக்காத அளவிற்கு ஒரு முறை மருந்து தெளிக்கப்படுகிறது. பின்னர் களை பறிப்பு, அறுவடை என ஏக்கருக்கு ரூ.80 ஆயிரம் முதல் ரூ.85 ஆயிரம் வரையில் செலவு ஏற்படுகிறது. இக்கரும்பில் கனுக்கள் அதிமாக இருக்கும். தற்போது கடந்த சில வாரத்திற்கு முன்பாக விவசாயிகள் கன்னிகரும்பாக வெட்டி சிவகாமியம்மனுக்கு பூஜகள் செய்து சின்னமனூர் வாரச்சந்தைக்கு முதற்கட்டமாக விற்பனைக்கு வைத்தனர்.

இன்னும் ஒரு நாள் பாக்கியுள்ள நிலையில் கரும்பு அறுவடை வேகமாக நடந்து வருகிறது. முன்ன தாக வெளி மாவட்ட வியாபாரிகள் சின்னமனூரில் முகாமிட்டு விவசாயிகளிடம் நேரடி கொள்முதல் செய்கின்றனர். அதை லாரிகளின் மூலமாக ஏற்றி திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, கோயமுத்தூர், சேலம், ஈரோடு, ராமநாதபுரம், விழுப்புரம், சென்னை போன்ற பல பெருநகரங்களுக்கு அனுப்பி வருகின்றனர். நடப்பாண்டில் மேலூர், புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் சரிவர கரும்பு உற்பத்தி இல்லாததால் கரும்பு கிடைக்காத நிலை இருக்கிறது. சின்னமனூரில் ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் கரும்புகள் மகசூலாக கிடைத்துள்ளது. விலையில் 10 கரும்பு கொண்ட ஒரு கட்டு 130 ரூபாயாக விற்படுகிறது. வெளி மாவட் டங்களில் கரும்பு உற்பத்தி மிக குறைவால் சின்னமனூர் கரும்பிற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

## கரும்பு விளைச்சல் குறைவால் விலை கடும் உயர்வு

விருதுநகர், : கரும்பு விளைச்சல் பரப்பளவு மழையின்மையால் குறைந்து போனதால் நடப்பு பொங்கல் பண்டிகைக்கான கரும்பு விலை கடுமையாக உயர்ந்துள்ளது. 15 கரும்பு கொண்ட கட்டு ரூ.350க்கும், ஒரு கரும்பு ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. பருவமழை கடந்த ஆண்டை விட குறைந்து போனதும், கூலி ஆட்கள் பற்றாக்குறையால் கருப்பு பயிரிடுவதை விவசாயிகள் குறைத்து கொண்டனர். இதனால் விளைநிலங்கள் அனைத்தும் பிளாட்டுக்களாக மாறி வருகின்றன. மேலும் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத காரணத்தால் விளை நிலங்களின் பரப் பளவு ஆண்டுக்கு, ஆண்டு சுருங்கி வருகிறது.

ஆலைக் கரும்புக்கு உரிய விலை நிர்ணயம் இல்லை, வெட்டிய கரும்புக்கு சர்க்கரைஆலைகள் பணப்பட்டுவாடா பிரச்னையால் ஆலைக்கரும்பு விளைவிக்கும் விவசாயிகள் விவசாயத்தை கைவிட்டு வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டத்தில் பருவமழை சராசரியாக 811.70 மி.மீ பெய்ய வேண்டிய

நிலையில் கடந்த ஆண்டு 624.61 மி.மீ மழை மட்டும் பெய்துள்ளது. அதுவும் தொடர்ச்சியாக பெய்யாத காரணத்தால் கண்மாய்கள், அணைகள் அனைத்தும் வறண்டு கிடக்கின்றன. மாவட்டத்தில் நடையனேரி, முருகனேரி பகுதிகளில் மட்டும் செங்கரும்பு விவசாயம் நடைபெற்று வருகிறது. மதுரை மாவட்டம் மேலூர் பகுதி செங்கரும்புகள் மக்களின் வரவேற்பு பெற்றவை. மேலூர் கரும்புகளுக்கு இணையாக நடையனேரி கரும்புகளுக்கு வரவேற்பு உள்ளது. கரும்பு விற்பனை இன்று(13ம்தேதி) மதியம் முதல் சுடுபிடிக்க துவங்கும் நிலையில் அனைத்து நகரங்களிலும் கரும்புகள் வந்து இறங்கிய வண்ணம் உள்ளது.

நடையனேரி மற்றும் முருகனேரி பகுதிகளில் ஆண்டுதோறும் கரும்பு விவசாயம் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் நடைபெறுவது வழக்கம். கடந்த ஆண்டு மழைக்குறைவால் செங் கரும்பு விவசாயம் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் மட்டும் நடந்துள்ளது. மதுரை மாவட்டம் மேலூர் பகுதியிலும் கரும்பு விவசாய பரப்பளவு குறைந்துள்ளது. இதனால் நடப்பாண்டில் 15 கரும்பு கொண்ட கட்டு ரூ.250 முதல் ரூ.300 வரை விலைபோகிறது. இதனை பெறும் வியாபாரிகள் ஒரு கட்டு கரும்பு ரூ.350க்கு விற்பனை செய்கின்றனர்.

விவசாயி செந்தில்குமரன் கூறுகையில், மழையின்மையால் கரும்பு விவசாய பரப்பளவு பாதியாக குறைந்துள்ளது. நடையனேரி, முருகனேரி கரும்புகள் சிவகாசி, தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. ஒரு ஏக்கரில் ஆயிரத்து 500 கட்டுகள் மட்டும் கிடைக்கும்.

கடந்த ஆண்டு ஒரு கட்டு ரூ.150 முதல் ரூ.180 வரை விலை போனது. தற்போது தேவைக்கான கரும்பு இல்லை. மழையின்மையால் விளைச்சல் பாதிப்பால் கரும்பு விலை இருமடங்காக உயர்ந்துள்ளது என்றார்.

வியாபாரி ராதாகிருஷ்ணன் கூறுகையில், ஒரு கட்டு கரும்பு தோட்டத்தில் ரூ.280க்கு விலை கொடுத்து வாங்கி உள்ளோம். லாரி வாடகை மற்ற செலவு கூலி சேர்த்து ஒரு கட்டு கரும்பு ரூ.350க்கு விற்றால் தான் கட்டுபடியாகும். ஒரு கரும்பு ரூ.40 முதல் ரூ.50க்கு விற்பதாக தெரிவித்தார்.

## தானே புயல் பாதித்த விவசாயிகளுக்கு கடனுதவி

பண்ருட்டி, : கடலூர் மாவட்ட வங்கிகள் சார்பில் தானே புயல் பாதித்த முந்திரி விவசாயிகள், மாணவர்களுக்கு கல்வி கடன் வழங்கும் விழா நேற்று பண்ருட்டியில் நடந்தது. இந்தியன் வங்கி தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் பசின் தலைமை தாங்கினார். கடலூர் மண்டல மேலாளர் மணிமாறன், ஸ்டேட் வங்கி முதன்மை பொது மேலாளர் வர்ஷாபுரந்தரி, பொது மேலாளர்கள் சஞ்சீவ்சதா, இளங்கோவன், கனரா வங்கி

பொது மேலாளர் அசோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அழகிரி எம்பி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு 5500 பயனாளிகளுக்கு ரூ. 44 கோடி கடன் உதவி வழங்கி பேசியதாவது:

தானே புயலில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு பல்வேறு அமைப்புகள் செயலாற்றின. கடனை 7 ஆண்டுகளுக்கு பிறகே திரும்ப செலுத்த வேண்டும். மத்திய நிதி அமைச்சர் முழுமையான செயல்திறனில் இருப்பதால் இந்தியாவின் எந்த வங்கியும் திவாலாகவில்லை. தெளிவாக சிந்தனையும், செயல்திறனும் இருப்பதால் பொருளாதாரத்தில் இந்தியா வலிமையாக உள்ளது. தமிழகத்தில்தான் அதிகளவு கல்விக்கடன் வழங்கப்படுகிறது. கடலூர் மாவட்டத்தில் ஆறுகளின் கரைகளை பலப்படுத்த ரூ. 300 கோடி ஒதுக்கப்பட்டது வரலாற்று சான்றாக உள்ளது என்றார். விழாவில் மாவட்ட தலைவர் ராதாகிருஷ்ணன், மாநில சிறுபான்மை பிரிவு செயலாளர் சம்சுதீன், மாவட்ட பொதுச்செயலாளர் ராஜன், இளைஞர் காங்கிரஸ் துணைத்தலைவர் லிஸிஜோசபின் சவரிநாதன், பொதுச்செயலாளர் ரஞ்சித், இளைஞர் காங்கிரஸ் நெய்வேலி தலைவர் வேல்முருகன், துணைத்தலைவர் செல்வராஜ், வட்டார தலைவர் மூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாரைக்கால் ஏரியை தூர்வார கோரிக்கை

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் அருகே வீராணநல்லூரில் வெட்டு வாய்க்கால் மூலம் நீர் வரப்பெற்று சுமார் 590 ஏக்கர் பாசனத்திற்கு பயன்படும் நாரைக்கால் ஏரி உள்ளது.

இந்த ஏரிக்கு மேட்டூரிலிருந்து கல்லணை மூலம் கீழணையில் தண்ணீர் சேமிக்கப்பட்டு, வடவாறு வழியாக ஏரிக்கு தண்ணீர் வந்தடைகிறது. மழை காலங்களில் பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், செந்துறை, ஸ்ரீமுஷ்ணம், அரியலூர், பெரம்பலூர், ஆகிய பகுதிகளில் பெய்யும் மழைநீர் ஏரிக்கு வருகிறது. கண்டமங்கலம், குருங்குடி, வீராணநல்லூர், நாட்டார்மங்கலம், ஆகிய ஊர்களில் உள்ள விளை நிலங்கள் இதன் மூலம் பாசனம் பெறுகின்றன. வீராணம் ஏரிக்கு அடுத்த பெரிய ஏரியாக இப்பகுதி மக்களால் கருதப்படும் சுமார் 3400 மீட்டர் பரப்பளவு உள்ள இந்த ஏரி கடந்த 25ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எனவே, ஏரியை தூர்வாரி வரும் காலங்களில் அதிக அளவு தண்ணீர் சேமித்து விவசாயத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மேச்சேரியில் ஒரு கூடை தக்காளி ரூ 50க்கு விற்பனை

மேட்டூர், : மேச்சேரி பகுதிகளில் தக்காளி ஒரு கூடை ரூ 50க்கு விற்பனையாவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் மல்லிகுந்தம், வெள்ளார், எருமப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தக்காளி அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாத காலமாக தக்காளி விற்பனை சூடுபிடித்தது. கடந்த வாரம் 15 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ 200க்கு விற்கப்பட்டது. தற்போது தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. இதனால் தக்காளியின் விலை சரிவை நோக்கி சென்றது. நேற்று 15 கிலோ எடை கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ 50 க்கு மட்டும் விற்கப்பட்டது. இது பற்றி விவசாயிகள் தக்காளி பறிக்கும் கூலிக்கும், சுமை கூலிக்கும் கூட இந்த விலை கட்டுபடியாகவில்லை என்றனர். பொங்கல் நேரத்தில் தக்காளி விலை சரிந்திருப்பது தங்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.
அதே போல் மேச்சேரியில் தக்காளி ஜூஸ் பேக்டரி, ஜாம் பேக்டரி ஆகியவற்றை அரசு விரைவில் துவக்கினால் தங்களது வாழ்க்கை செழிக்கும் என்றும் தெரிவித்தனர்.

## பொங்கல் பண்டிகை எதிரொலி போச்சம்பள்ளி வாரச்சந்தையில் ஆடுகள் விற்பனை அமோகம்

போச்சம்பள்ளி, : பொங்கல் பண்டிகையையொட்டி, போச்சம்பள்ளி வாரச்சந்தையில் ஆடுகள் விற்பனை அமோகமாக இருந்தது. நேற்று ஒரே நாளில் சுமார் ரூ1 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது.
கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் ஞாயிறு தோறும் வாரச்சந்தை கூடுகிறது. இது, தமிழகத்தில் மிகப்பெரிய 2வது சந்தையாகும். இங்கு, தக்காளி முதல் தங்கம் வரை அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த சந்தைக்கு ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தும், வேலூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வியாபாரிகள் திரண்டு வந்து பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.
பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, நேற்று முன்தினம் இரவு முதலே பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள், விவசாயிகள் குவிந்தனர். இந்த சந்தைக்கு, மாட்டு பொங்கல் பண்டிகையையொட்டி கால்நடைகளை அலங்கரிக்க பயன்படுத்தப்படும் பொருட்கள் அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பொங்கல் பானைகள், வண்ண வண்ண கோலப்பொடிகள், காய்கறிகள், மஞ்சள் உள்ளிட்ட பொருட்களும் அதிகளவில் கொண்டு வரப்பட்டிருந்தது.

ஆயிரக்கணக்கான ஆடுகள், கோழிகளும் விற்பனைக்கு வந்திருந்தன. இதனால் சந்தை களை கட்டியிருந்தது. மக்கள், வியாபாரிகள் ஆர்வமுடன் பொருட்களை வாங்கிச் சென்றனர். இங்கு நேற்று ஒரே நாளில் மட்டும் 5 ஆயிரத்திற்கும் அதிகமான ஆடுகள் விற்பனை செய்யப்பட்டன. தங்கம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விற்பனையும் அமோகமாக நடந்தது.

இதனால், இந்த சந்தையில் நேற்று சுமார் ரூ1 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர். சந்தையில் கூட்டம் அலைமோதியதால் இன்ஸ்பெக்டர் முருகன் தலைமையில் போலீசார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

### குளிர்காலம் என்பதால் அன்னாசி பழம் விற்பனை சரிவு

சேலம், : குளிர்காலம் என்பதால் அன்னாசி பழம் விற்பனை சரிந்துள்ளது. சேலம் மார்க்கெட்டிற்கு கேரளாவில் இருந்து அன்னாசி பழம் விற்பனைக்கு வருகிறது. 4 நாட்களுக்கு ஒரு முறை 20 டன் அன்னாசி பழம் வருகிறது. பொதுவாக வெயில் காலத்தில் அன்னாசி பழம் அதிகமாக விற்பனை ஆகும். தற்போது பனிக்காலம் என்பதாலும், பண்டிகைகள் இல்லாததாலும் அன்னாசி பழம் கிலோவிற்கு ரூ10 வரை விலை குறைந்துள்ளது. பத்து நாட்களுக்கு முன் ரூ30 முதல் ரூ35க்கு விற்பனையான அன்னாசி பழம் தற்போது ரூ25க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், 'பனிக்காலத்தில் அன்னாசி பழம் எப்போதும் குறைவாகவே விற்பனை ஆகும். அதனால் கிலோவிற்கு ரூ10 வரை விலை குறைந்துள்ளது. விலை குறைந்தும் கூட 6 முதல் 7 டன் அன்னாசி பழம் மட்டுமே விற்பனையாகிறது. பிப்ரவரி மாத இறுதி வரை, அன்னாசி பழம் இதே விலையில் விற்பனை ஆகும். அதன் பின் வெயில் காலம் என்பதால், நுகர்வு அதிகரிக்கும் போது விலை உயரும்' என்றனர்.

### கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பயிர்க்கடன் பெற நிபந்தனையை தளர்த்த வேண்டும்

நாமக்கல், : கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் பயிர்க்கடன் பெற நிபந்தனைகளை தளர்த்த வேண் டுமென கொங்கு வேளாள கவுண்டர் பேரவை வலியுறுத்தியுள்ளது. இது குறித்து கொங்கு வேளாள கவுண்டர்கள் பேரவை மாநில தலைவர் பொங்கலூர் மணிகண்டன் கூறியிருப்பதாவது:

தமிழகம் முழுவதும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளன.

வணிக நோக்கில் செயல்படும் அரசு மற்றும் அரசு சாரா வங்கியில் விவசாயிகளுக்கான தங்க நகை அடமானத்தின் பேரில் வழங்கப்படும் பயிர் கடனுக்கான வட்டி விகிதம் 32 பைசா என்பதை விட, வட்டியே இல்லாத கடனை கூட்டுறவு சங்கங்கள் அளித்து வருகிறது.

கூட்டுறவு வங்கியில் கடன் பெற வங்கியின் கள ஆய்வு, பயிர் செய்துள்ளதற்கான சான்று, கிராம நிர்வாக அலுவலர் சான்று, என்பது மட்டுமல்லாமல் ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று குறைவான தொகையையே பரிந்துரைக்கிறார்கள். மேலும் தென்னை விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ16 ஆயிரம் மட்டுமே நகை அடமானத்தின் பேரில் பயிர்க் கடன் வழங்கப்படுகிறது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் வட்டி 32 பைசாவை தவிர எவ்வித நிபந்தனையும் இல்லை. ஆனால் கூட்டுறவு வங்கியில் வட்டியில்லா கடன் என்கிற பெயரில் நிபந்தனைகள் அதிகமாக உள்ளது. விவசாயிகள் விரைந்து கடன் பெற வசதியாக நிபந்தனைகளை தளர்த்த வேண்டும். கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களாக பெரும்பாலோர் விவசாயிகளே இருப்பதால், அரசின் நிபந்தனையால் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் நகை அடமானத்தின் பேரிலான பயிர் கடன் வழங்க முடியாத சங்கடத்திற்கு ஆளாகின்றனர்.

இதனால் உள்ளூர் விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். எனவே, தமிழக முதல்வர் தலையிட்டு கூட்டுறவு சங்கங்களில் தங்க நகையின் பேரில் பயிர்க்கடன் கடன் பெற விவசாயிகளுக்கு முழு நிபந்தனைகளும் விலக்கப்பட வேண்டும். இவ்வாறு பொங்கலூர் மணிகண்டன் தெரிவித்துள்ளார்.

## காட்டேஜ், ரிசார்ட்கள் கட்டுபவர்களிடமிருந்து தேயிலை தோட்டங்களை பாதுகாக்க கோரி முதல்வருக்கு மனு

கோத்தகிரி, : நாக்குபெட்டா விவசாயிகள் நலச்சங்க செயலாளர் சிவக்குமார் தமிழக முதல்வருக்கு அனுப்புள்ள மனுவில் கூறியிருப்பதாவது: நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழில் நசிவு காரணமாக சிறு தேயிலை தோட்ட விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். இச்சூழ்நிலை¬ யப் பயன்படுத்தி பிற மாவட்டங்களைச் சேர்ந்த சிலர் லாப நோக்கோடு சிறு தேயிலை விவசாயிகளிடம் ஆசை வார்த்தை கூறி அவ ர்களின் தேயிலை தோட்டங்களை குறைந்த விலைக்கு வாங்குகின்றனர்.

பிறகு அங்கு உல்லாச விடுதிகள், காட்டேஜ்கள் ஆகியவற்றை கட்டி கொள் ளை லாபம் ஈட்டி வருகின்றனர். குறிப்பாக சாலையோரங்களில் உள்ள தேயிலை தோட்டங்களை குறி வைத்து வாங்கும் பணக்காரர்கள் சுற்றிலும் வேலி அமைத்து கொள்வதால் அருகிலுள்ள தேயிலை தோட்டங்களுக்கு சிறு விவசாயிகள் செல்ல முடியாமல் அவதியுற்று வருகின்றனர். தங்களது தேயிலை தோட்டங்களுக்கு விவசாய பொருட்களை கொண்டு

செல்வதற்கு உரம் போன்றவற்றை எடுத்து செல்ல பாதையில்லாமல் தடுமாறி வருகின்றனர். இதனை பயன்படுத்தி அருகிலுள்ள தோட்டத்தையும் அடிம £ட்டு விலைக்கு வாங்கி ரிசாட் டுகள், காட்டேஜ்கள் கட்டி வருகின்றனர். இந்நிலை தொட ராமல் இருக்க தமிழக முதல்வர் ஒரு குழு அமைத்து விசாரணை செய்து விவசாயிகளுக்கு உத்தரவிட வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நெற்பயிரில் ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வழிமுறை வேளாண் அதிகாரி விளக்கம்

சேதுபாவாசத்திரம், : நெற்பயிரில் காணப்படும் ஊட்டச்சத்து குறைபாடுகளும், அதனை நிவர்த்தி செய்யும் முறைகள் பற்றியும் வேளாண் அதிகாரி விளக் கம் அளித்துள்ளார். இது குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை அலுவலர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மணிச்சத்து பற்றாக்குறை தென் படும் இடங்களில் பரிந்துரைக்கப்பட்ட யூரியா அளவினை முறையாக அடியுரமாகவும், மேலுரமாகவும் பிரித்து இடவேண்டும். அல்லது ஒரு சதம் யூரியா கரைசலை 10 நாள் இடைவெளியில் அறிகுறிகள் மறையும் வரை தெளிக்க வேண்டும். சாம்பல் சத்து பற்றாக் குறை என்பது நீர் தேங்கும் பகுதிகளிலும், இரும்பு சத்து அதிகமாகும் போதும் அமில நிலங்களிலும், வடிகால் வசதியற்ற நிலங்களிலும் தென்படும். இதனால் முதிர்ந்த இலை களில் நீண்ட பழுப்பு நிற புள்ளிகள் இலையில் நடுவிலிருந்து நுனிவரை காண ப்படும். மணியில் பால் பிடிக்கும் திறன் குறைந்து அதிக பதர்கள் உருவாகும். இதனை நிவர்த்தி செய்ய 5 கிராம் பொட்டாசியம் குளோ ரைடை 1 லிட்டர் தண்ணீ ரில் கரைத்து 15 நாட்கள் இடைவெளியில் அறிகுறிகள் மறையும் வரை தெளிக்க வேண்டும். துத்தநாக சத்து பற்றாக் குறை என்பது சுண்ணாம்பு சத்து மிகுந்த நிலங்களிலும், களர் மற்றும் அங்ககப்பொருட்கள் அதிகமாக உள்ள நிலங்களிலும், தலைசத்து மற்றும் மணிச்சத்து அதிகம் இட்ட நிலங்களில் காணப் படும். இதனால் இலையின் அடிப்பாகத்தில் நடுநரம்பின் இருபுறமும், பட் டையான மஞ்சள் நிற கோடுகள் தோன்றும். சிவப்பு கலந்த பழுப்பு நிறம் கீழ் இலைகளில் காணப் படும் மணிபிடித்தல் கால தாமதமாகும். வளர்ச்சி சீராக இருக்காது. இக்குறையினை போக் கிட நாற்றங்காலில் 1 செண் ட்க்கு 100கிராம் அல்லது நடவு வயலில் அடியுராமாக ஏக்கருக்கு 10கிலோ ஜிங் சல்பேட் இடவேண் டும். அல்லது 1 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் ஜிங் சல்பேட் என்ற விகிதத்தில் கரைத்து இலையின் மீது நன்கு படும்படி 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும். இரும்பு சத்து பற்றாக் குறை என்பது மண்ணின் கார- அமிலத்தன்மை 8 மேல் உள்ள நிலங்களிலும், மணற்பாங்கான நிலங்களிலும், களர் நிலத்திலும் காணப்படும். இதனால் புதிய தளிர்

இலைகள் இளம் மஞ்சள் நிறமாக இருந்து பின்னர் வெள்ளை யாக மாறிவிடும். இக்குறையினை போக்கிட 5 கிராம் பெரஸ்சல்பேட்டையும், 10 கிராம் யூரியாவையும் 1 லிட்டர் தண்ணீ ரில் கரைத்து 15 நாட்கள் இடைவெளியில் இலையில் பச்சையம் தோன்றும் வரை தெளிக்க வேண்டும்.இவ்வா று வேளாண் அலுவலர் தெரிவித்துள்ளார்.

## செந்துறையில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை அளிப்பு

அரியலூர், : செந்துறையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் சார்பில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.
அரியலூர் மாவட்டம், செந்துறையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் சார்பில் பால் உற்பத்தி
யாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. விழாவுக்கு பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ஜமால் முகமது தலைமை வகித்தார். துணைத் தலைவர் பாண்டியன் முன்னிலை வகித்தார்.
விழாவில் செந்துறை வட்டாரத்தில் சிறந்த உற்பத்தியாளர்களாகத் தேர்வு செய்யப்பட்ட 3 ஆயிரத்து 823 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.54.79 லட்சம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இதில் முதலிடம் பெற்ற நின்னியூரைச் சேர்ந்த பாண்டியனுக்கு ரூ.22 ஆயிரத்து 327 ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது. விழாவில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக, கூட்டுறவு சங்கச் செயலாளர் கொளஞ்சிநாதன் வரவேற்றார். முடிவில் காசாளர் நவமணி நன்றி கூறினார்.

## பொங்கல் பொருள் வாங்க குடந்தை மார்க்கெட்டில் மக்கள் குவிந்தனர் ஒரே நாளில் 80 டன் காய்கள் விற்பனை

கும்பகோணம், : பொங்கல் பொருள் வாங்க கும்பகோணம் மார்க்கெட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்தனர். நேற்று ஒரே நாளில் மட்டும் 80 டன் காய்கள் விற்கப்பட்டன.
சென்னை கோயம்பேடு மார்க்கெட், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுக்கு அடுத்தபடியாக கும்பகோணம் நேரு மொத்த விற்பனை மார்க்கெட் இயங்கி வருகிறது. இந்த மார்க்கெட்டிற்கு புனே, பெங்களூர், பெல்லாரி, ஆந்திரா ஆகிய வெளி மாநிலங்களில் இருந்தும் ஊட்டி, தேனி, திண்டுக்கல் உள்ளிட்ட ஊர்களில் இருந்தும் தினமும் 200 லாரிகளில் வெங்காயம், தக்காளி, உருளை, கத்தரிக்காய், பீன்ஸ், காலிபிளவர், கேரட், மிளகாய் ஆகிய காய்கள் கும்பகோணத்திற்கு விற்பனைக்காக வருவது வழக்கம்.

கும்பகோணம் மார்க்கெட்டிலிருந்து தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர், சிதம்பரம், அரியலூர், பெரம்பலூர் ஆகிய பகுதிகளில் உள்ள சில்லரை வியாபாரிகள் காய்கறிகளை மினி லாரிகளில் தினமும் வாங்கி செல்கின்றனர். கும்பகோணம் மொத்த விற்பனை மார்க்கெட்டில் 200க்கும் மேற்பட்டோர் வியாபாரம் செய்து வருகின்றனர். அதிகாலை 2 மணிக்கு தொடங்கும் வியாபாரம் காலை 8 மணிக்கு நிறைவடைந்துவிடும். இந்நிலையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கும்பகோணம் மார்க்கெட்டிற்கு கடந்த இரு தினங்களாக காய்கறிகள் வரத்து அதிகமாக இருந்தது. இதில் உருளைகிழங்கு, சர்க்கரைவள்ளி கிழங்கு, மொச்சை, அவரை, பரங்கி, முருங்கை, வெங்காயம், தக்காளி, பீட்ரூட், பீன்ஸ் உள்ளிட்ட காய்களை ஏற்றி கொண்டு 300 லாரிகள் வந்தன.

கும்பகோணம் மார்க்கெட்டில் நேற்று அதிகாலை 2 மணியிலிருந்து மதியம் 2 மணி வரை பொங்கல் சிறப்பு வியாபாரம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் வந்து காய்கள் வாங்கிச் சென்றனர்.

இது குறித்து கும்பகோணம் காய்கறிகள் மொத்த வியாபாரி ஒருவர் கூறுகையில், கும்பகோணம் மார்கெட்டிலிருந்து சுற்று வட்டாரத்திற்கு நாளொன்றுக்கு 300 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்படுவது வழக்கம். பொங்கலுக்காக நேற்று மட்டும் சுமார் 80 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து நாளையும் (இன்று) சிறப்பு விற்பனை செய்யப்பட உள்ளது என்றார்.

இதே போல் கும்பகோணம் பாலக்கரை மார்க்கெட்டிலும், கும்பகோணம் உழவர்சந்தை மார்க்கெட்டிலும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு விற்பனை இரு தினங்களாக நடைபெற்றது.

## நெற்பயிரில் ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வழிமுறை வேளாண் அதிகாரி விளக்கம்

சேதுபாவாசத்திரம், : நெற்பயிரில் காணப்படும் ஊட்டச்சத்து குறைபாடுகளும், அதனை நிவர்த்தி செய்யும் முறைகள் பற்றியும் வேளாண் அதிகாரி விளக் கம் அளித்துள்ளார். இது குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை அலுவலர் பெரியசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தஞ்சை மாவட்டத்தை பொருத்த மட்டில் நெற்பயிரில் தழைச்சத்து மற்றும் மணிச்சத்து பற்றாக்குறை என்பது பெரிய அளவில் இல்லை. குறிப்பாக மணிச்சத்து பற்றாக்குறை தென் படும் இடங்களில் பரிந்துரைக்கப்பட்ட யூரியா அளவினை முறையாக அடியுரமாகவும், மேலுரமாகவும் பிரித்து இடவேண்டும். அல்லது ஒரு சதம் யூரியா கரைசலை 10 நாள் இடைவெளியில் அறிகுறிகள் மறையும் வரை தெளிக்க வேண்டும்.

சாம்பல் சத்து பற்றாக் குறை என்பது நீர் தேங்கும் பகுதிகளிலும், இரும்பு சத்து அதிகமாகும் போதும் அமில நிலங்களிலுணீம், வடிகால் வசதியற்ற நிலங்களிலும் தென்படும். இதனால் முதிர்ந்த இலை களில் நீண்ட பழுப்பு நிற புள்ளிகள் இலையில் நடுவிலிருந்து நுனிவரை காண ப்படும். மணியில் பால் பிடிக்கும் திறன் குறைந்து அதிக பதர்கள் உருவாகும். இதனை நிவர்த்தி செய்ய 5 கிராம் பொட்டாசியம் குளோ ரைடை 1 லிட்டர் தண்ணீ ரில் கரைத்து 15 நாட்கள் இடைவெளியில் அறிகுறிகள் மறையும் வரை தெளிக்க வேண்டும். துத்தநாக சத்து பற்றாக் குறை என்பது சுண்ணாம்பு சத்து மிகுந்த நிலங்களிலும், களர் மற்றும் அங்ககப்பொருட்கள் அதிகமாக உள்ள நிலங்களிலும், தலைசத்து மற்றும் மணிச்சத்து அதிகம் இட்ட நிலங்களில் காணப் படும். இதனால் இலையின் அடிப்பாகத்தில் நடுநரம்பின் இருபுறமும், பட் டையான மஞ்சள் நிற கோடுகள் தோன்றும். சிவப்பு கலந்த பழுப்பு நிறம் கீழ் இலைகளில் காணப் படும் மணிபிடித்தல் கால தாமதமாகும். வளர்ச்சி சீராக இருக்காது. இக்குறையினை போக் கிட நாற்றங்காலில் 1 செண் ட்க்கு 100கிராம் அல்லது நடவு வயலில் அடியுராமாக ஏக்கருக்கு 10கிலோ ஜிங் சல்பேட் இடவேண் டும். அல்லது 1 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் ஜிங் சல்பேட் என்ற விகிதத்தில் கரைத்து இலையின் மீது நன்கு படும்படி 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும். இரும்பு சத்து பற்றாக் குறை என்பது மண்ணின் கார- அமிலத்தன்மை 8 மேல் உள்ள நிலங்களிலும், மணற்பாங்கான நிலங்களிலும், களர் நிலத்திலும் காணப்படும். இதனால் புதிய தளிர் இலைகள் இளம் மஞ்சள் நிறமாக இருந்து பின்னர் வெள்ளை யாக மாறிவிடும். இக்குறையினை போக்கிட 5 கிராம் பெரஸ்சல்பேட்டையும், 10 கிராம் யூரியாவையும் 1 லிட்டர் தண்ணீ ரில் கரைத்து 15 நாட்கள் இடைவெளியில் இலையில் பச்சையம் தோன்றும் வரை தெளிக்க வேண்டும்.இவ்வா று வேளாண் அலுவலர் தெரிவித்துள்ளார்.

### கரும்பு கொள்முதல் விலையை ரூ.4 ஆயிரமாக உயர்த்த வலியுறுத்தல்

அலங்காநல்லூர் : கரும்பு கொள்முதல் விலையை ரூ.4 ஆயிரமாக உயர்த்த வலியுறுத்தப்பட்டது.

அலங்காநல்லூரில் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 16வது மகாசபை கூட்டம் மற்றும் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. ஆலை நிர்வாக தலைவர் ராம்குமார் தலைமை வகித்தார். மேலாண்மை இயக்குநர் செம்புகுட்டி, துணைத் தலைவர் மணி முன்னிலை வகித்தனர். சோழவந்தான் எம்எல்ஏ கருப்பையா கலந்துகொண்டார். நிகழ்ச்சியில் விவசாயிகள் சங்கத்தினர் பேசியதாவது:

கரும்பு கொள்முதல் விலையை அரசு ரூ.4 ஆயிரமாக உயர்த்த வேண்டும். குறைந்து வரும் கரும்பு உற்பத்தியை பெருக்குவதற்கு ஆலை நிர்வாகம் தீவிர முயற்சி எடுக்க வேண்டும். கடந்த ஆண்டைவிட கரும்பு பதிவு பாதியாக குறைந்துள்ளது. இந்த ஆண்டு ஒரு லட்சத்து 30 ஆயிரம் டன் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் பாதி பேர் சொந்தமாக ஆலை அமைத்து வெல்லம் தயாரித்து வருகின்றனர். வெளிமாவட்ட ஆலைகளுக்கு முறைகேடாக அனுப்பி வருகின்றனர். கரும்புகளை வெளிமாவட்ட ஆலைகளுக்கு கொண்டு செல்வதைத் தடுக்க சோதனை சாவடிகள் அமைக்க வேண்டும். காலநிலை மாற்றத்தால் உள்ள தண்ணீர் பஞ்சத்தை போக்க கரும்பு விவசாயிகளுக்கும் சொட்டுநீர் பாசன அமைப்பதற்கு அரசு முழு மானியத்தோடு நிதி உதவி செய்யவேண்டும் என்றனர்.

இதற்குப் பதிலளித்து பேசிய சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா மற்றும் ஆலை நிர்வாக தலைவர் ராம்குமார்,

"விவசாயிகள் கோரிக்கைகள் அனைத்தும் தமிழக முதல்வரின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, ஆலை வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றனர்.

கூட்டத்தில் நிர்வாக இயக்குநர்கள் பழனிச்சாமி, நல்லமணிகாந்தி, விவசாய சங்க பிரதிநிதிகள் அப்பாஸ், அழகர்சாமி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## இரட்டைமடி வலையால் மீன்பிடித்தால் நடவடிக்கை மீன்வளத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை

ராமேஸ்வரம், : ராமேஸ்வரம் கடல் பகுதியில் இரட்டைமடி வலையால் மீன்பிடித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மீன்வளத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ராமேஸ்வரம் கடல் பகுதியில் கடல் வளத்தை அழிக்கும் இரட்டைமடி வலையை பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடிக்கின்றனர். அரசால் தடை செய்யப்பட்ட இந்த வலையால் மீன்பிடிக்கும் படகுகள் மீது அவ்வப்போது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தாலும், இவ்வகை மீன்பிடிப்பு ராமேஸ்வரம் கடல் பகுதியில் தொடர்கிறது. இரட்டைமடி வலையால் டன் கணக்கில் பிடித்து வரப்படும் பேசாளை மீன்களை லாரிகளில் ஏற்றி வெளியூர்களுக்கு கொண்டு செல்லும் போது, லாரியில் இருந்து ரத்த கழிவுகளுடன் ரோட் டில் வழிந்தோடும் மீன்கழிவுநீரால் விபத்து ஏற்படுவதோடு, நகர் முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது. இதனை தடுக்க பல்வேறு நடவடிக்கை எடுத்து வந்தாலும், மீன்வளத்துறை அதிகாரிகளின் மறைமுக ஆதரவுடன் இவ்வகை மீன்பிடிப்பு தொடர்கிறது.

சில நாட்களுக்கு முன்பு இரட்டைமடி வலையால் மீன்பிடித்த 7 படகுகளை மீன்துறை அதிகாரிகள் பிடித்து நடவடிக்கைக்கு பரிந்துரை செய்துள்ளனர். அந்த படகுகள் கடலுக்கு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன் தினம் மீன்பிடிக்க சென்ற படகுகளில் இரட்டைமடி வலையால் மீன்பிடிக்கவும் மீனவர்கள் கடலுக்கு சென்றதாக மீன்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்ததை தொடர்ந்து நேற்று மீன்பிடித்து ராமேஸ்வரம் திரும்பிய படகுகளை மீன்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். இதனால் இரட்டைமடி வலையால் மீன்பிடித்து திரும்பிய பல படகுகள், கரைக்கு வராமல் மீன்களுடன் நீண்ட நேரம் கடலில் நிறுத்தப்பட்டன. பிடித்து வரப்பட்ட மீன்களும் படகில் இருந்து இறக்கப்படவில்லை. இந்நிலையில் ராமேஸ்வரம் தாலுகா அலுவலகத்தில் தாசில்தார் மீனாட்சி தலைமையில் மீனவ பிரதிநிதிகளின் கூட்டம் நடந்தது. ராமேஸ்வரம் டிஎஸ்பி விஜயகுமார், மீன்துறை உதவி இயக்குநர் கோபிநாத் உட்பட அதிகாரிகளும், மீனவ சங்க தலைவர்களும் கலந்து கொண்டனர்.
அரசால் தடை செய்யப்பட்ட இரட்டைமடி வலையை மீனவர்கள் பயன்படுத்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் எச்சரித்தனர். மேலும் பேசாளை மீன்களை லாரிகளில் ஏற்றி செல்லும் போது ரோட்டில் கழிவுநீர் வழிந்தால் வாகனத்திற்கு அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்க கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தை தொடர்ந்து படகுகளில் பிடித்து வரப்பட்ட பேசாளை மீன்கள் லாரிகளில் ஏற்றி செல்லப்பட்டது.

## பயிர் இன்சூரன்ஸ் கணக்கெடுப்பில் மாற்றம் வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

திருவாடானை, : பயிர் இன்சூரன்ஸ் கணக்கெடுப்பு முறையில் மாற்றம் செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
திருவாடானை தாலு காவில் 7 பிர்காக்களும், 95 வருவாய் கிராமங்களும் (குரூப்) உள்ளன. ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்தாண்டு ஏற்பட்ட வறட்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனால் கடந்தா ண்டு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு ரூ.140 கோடி இழப்பீடு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருவாடானை தாலு காவில் தொண்டி பிர்காவிற்கு ஏக்கருக்கு ரூ.2 ஆயி ரத்து 132, திருவாடானை பிர்காவிற்கு ரூ.1886, ஆர்.எஸ். மங்கலம் பிர்காவிற்கு ரூ.7 ஆயிரத்து 380, ஆனந்தூர் பிர்காவிற்கு ரூ.7 ஆயிரத்து 708, சோழந் தூர் பிர்காவிற்கு ரூ.7 ஆயிரத்து 462, மங்கலக் குடி பிர்காவிற்கு ரூ.841 என இழப்பீடு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புல்லூர் குரூப்பிற்கு இழப்பீடு தொகை ஒதுக்கப்படவில்லை.
இந்த இழப்பீடு தொகை யால் விவசாயிகள் அதிர் ச்சி அடைந்துள்ளனர். முற்றிலும்

விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கும், ஓரளவு விளைச்சல் இருந்த கிராமங்களுக்கும் ஒரே மாதிரியான இழப்பீடு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாதிப்பை பிர்கா வாரியாக கணக்கெடுப்பு செய்வதால் பாதித்தவர்களுக்கும், பாதிக்காதவர்களுக்கும் ஒரே அளவிளான இழப்பீடு வழங்கப்படுகிறது

மாநில அரசு செயற்கைகோள் விவரப்படி ஒரு குரூப்பில் 3 இடங்களின் சர்வே எண்ணில் கணக்கெடுப்பு செய்து, அந்த நிலத்தின் விளைச்சலின் அடிப்படையில் பிர்கா முழுவதும் சராசரியாக இழப்பீடு தொகை நிர்ணயிக்கப்படுகிறது. இது குழப்பத்தை ஏற்படுத்துவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், பயிர் காப்பீடு இழப்பீடு வழங்க அரசு அனுப்பும் சர்வே எண்களுடைய வயல்களில் கிணற்று பாசனமாகவோ அல்லது பண்ணை குட்டை பாசனமாக இருந்தாலோ அதை எப்படி, அந்த குரூப்பில் உள்ள அனைத்து நிலங்களுக்கான கணக்காக ஏற்க முடியும். கடந்த ஆண்டு ஒரு பிர்காவில் 3 குரூப்புகளில் விளைச்சல் முற்றிலும் பாதிக்கப்பட்டது. மீதமுள்ள 7 குரூப்பில் 50 சதவீதத்திற்கு மேல் விளைச்சல் கிடைத்துள்ளது.

ஆனால் இழப்பீடு தொகை அனைவருக்கும் சமமாக வழங்கப்படு கிறது.

எனவே இந்த முறையை மாற்ற வேண்டும். குறிப்பிட்ட கிராமங்களில் மட்டுமே ஆய்வு நடத்தாமல் அனைத்து கிராமங்களிலும் வருவாய்த்துறை, வேளாண் துறை மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் ஆய்வு செய்ய வேண்டும். குரூப்பிற்கு உட்பட்ட அனைத்து கிராமங்களை ஆய்வு செய்யாததாலும், இழப்பீடு தொகை வழங்கும் இன்சூரன்ஸ் கம்பெனி விதிமுறைகளை பின்பற்றாததாலும் இது போன்ற குளறுபடி நிலவுகிறது. வரும் காலங்களில் குரூப்பிலுள்ள அனைத்து கிராமங்களையும் ஆய்வு செய்து இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்றனர்.

## பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு 3 வார நிலுவை தொகை வழங்கல் கறுப்பு பொங்கல் போராட்டம் வாபஸ்

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டத்திலுள்ள உள்ள பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு 3 வார நிலுவை தொகை ரூ4 கோடியே 75 லட்சம் வழங்கப்பட்டது. இதையடுத்து பால் உற்பத்தியாளர்கள் நடத்த இருந்த கறுப்பு பொங்கல் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள 585 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலம், தினமும் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் லிட்டர் பால், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆவின் ஒன்றியத்திற்கு வழங்கப்படுகிறது. இங்கு

கொள்முதல் செய்யப்படும் பால், சென்னை உள்பட தமிழகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆவின் ஒன்றியம் ரூ12 கோடி நிலுவை தொகை வழங்க வேண்டும் என்றும், நிலுவை தொகை வழங்கவிட்டால், தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பொங்கல் அன்று கிருஷ்ணகிரி ஆவின் கூட்டுறவு ஒன்றிய தலைமை அலுவலக நுழைவு வாயில் முன் கறுப்பு பொங்கல் போராட்டம் நடத்தப்படும் என எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. இதையடுத்து தமிழக அரசு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு 3 வார நிலுவை தொகை ரூ4 கோடியே 75 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டர் கூறுகையில், தமிழக அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு 8 வார நிலுவை தொகை ரூ12 கோடியில், 3 வார நிலுவை தொகை மட்டுமே வழங்கியுள்ளது. மேலும், மீதியுள்ள தொகையும் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும். மேலும், கோரிக்கைகளை ஏற்று, நிலுவை தொகை வழங்கியதை தொடர்ந்து கறுப்பு பொங்கல் போராட்டம் வாபஸ் பெறப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## எண்ணேகொல்புதூர் அணைக்கட்டு வலது புறத்தில் வாய்கால் அமைத்து வறட்சிப் பகுதிகளுக்கு நீர் வழங்க வேண்டும்முல்லைவேந்தன் கோரிக்கை

அரூர், : எண்ணேகொல்புதூர் அணைக்கட்டின் வலது புறத்தில் கால்வாய் அமைத்து வறட்சி பகுதிகளுக்கு தண்ணீர் வழங்கவேண்டும் என முல்லைவேந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து தர்மபுரி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் முல்லைவேந்தன் விடுத்துள்ள அறிக்கை:

கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தின் மேல் பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்க ஏற்கனவே எண்ணேக்கொல் அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இதன் வலதுபுறத்திலிருந்து புதிய வழங்கு கால்வாய் அமைத்து தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள வறட்சியான பகுதிகளுக்கு தண்ணீர் வழங்க வேண்டும். தென்பெண்ணை ஆற்றில் வெள்ளபெருக்கு ஏற்படும் காலங்களில், வரும் உபரி நீரை கொண்டு ஏரிகளையும் தடுப்பணைகளையும் நிரப்பலாம். இதன் மூலம் அம்மன் ஏரி, ஒட்டச்சி குட்டை, பாலகுறி, வரட்டஅள்ளி ஏரி, மாலகட்டிமனஅள்ளி, வண்ணள்குட்டை, சின்னஏரி, ஏலசிகுட்டைஅள்ளி, ராமநாதன்டேங், எலசிகுட்டைஅள்ளி ஏரி, மேனர்குட்டை, ராமனந்தம் குட்டை, முக்குளம் டேங்க், தேவர்முக்குளம் ஏரி உள்ளிட்ட 21 ஏரிகள் மற்றும் 16 தடுப்பணைகள் நிரப்பப்படும்.

மேலும், ஈர்ப்பு மண்டலத்திற்குட்பட்ட கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்து சுமார் 240

ஏக்கர் நிலமும், கால்வாய் செல்லும் நேர்பாட்டின் மூலம் 160 ஏக்கர் நிலமும் மொத்தத்தில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் 1610 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும், உணவு உற்பத்தியும் 6608 மெட்ரிக் டன் உயரும். அத்துடன் விவசாய கூலித் தொழிலாளர்களும், விவசாயிகளும், கால்நடைகளும் பயனடைவதுடன் குடிநீர் பஞ்சம் தீரும். இத்திட்ட மதிப்பீடு ரூ 73 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசு இனியும் காலதாமதம் செய்யாமல், இப்பகுதி மக்களின் நீண்ட கால் கோரிக்கையான எண்ணேகொல் அணைக்கட்டின் வலதுபுறத்திலிருந்து புதிய வழங்கு கால்வாய்கள் அமைத்து விவசாயிகள் பயன்பெற வழிவகை செய்ய வேண்டும் என திமுக கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### உளுந்தூர்பேட்டை பகுதியில் மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய் தாக்குதல்

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள எறையூர், வடகுரும்பூர், எல்லைகிராமம், பாளையம் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 600 ஏக்கருக்கு மேல் மஞ்சள் பயிரை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். கடந்த 3 மாதத்திற்கு முன்னர் மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் இன்னும் 20 நாளில் அறுவடை செய்யும் நிலையில் உள்ள னர்.

இந்நிலையில் மஞ்சள் பயிரில் ஏற்கனவே கிழங்கு வைக்கும் நேரத்தில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் இருந்தது. இதனை தடுக்க விவசாயிகள் பல்வேறு மருந்துகள் அடித்தும் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் மஞ்சள் கிழங்கில் பூச்சி தாக்குதல் அதிகரித்ததால் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதுகுறித்து விவசாயி அந்தோணிசாமி கூறிய போது, மஞ்சள் கிழங்கில் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால் அறுவடை நேரத்தில் மகசூல் குறைவாக கிடைக்கும் நிலை உள்ளது. நல்ல மகசூல் கிடைக்கும் என நினைத்து மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள் கடுமையாக நஷ்டம் அடைய வாய்ப்புள்ளது. சேலம், ஈரோடு உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் தனியார் கொள்முதல்காரர்கள் குறைந்த விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டால் மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். இதனை தடுக்க தமிழக அரசு மஞ்சளுக்கு தகுந்த விலை நிர்ணயம் செய்து நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என கூறினார். வேளாண்மை துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து எறையூர் மற்றும்

சுற்றியுள்ள கிராமங்களில் மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள் நஷ்டம் அடையாமல் பாதுகாக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## 2012-13ம் ஆண்டு வறட்சி பாதித்த நிலங்களுக்கு குறைந்த நிவாரணம் மறுகணக்கெடுப்பு நடத்த விவசாயிகள் வலியுறுத்தல்

மன்னார்குடி, : திருவாரூர் மாவட்டத்தில் 2012- 13ம் ஆண்டு வறட்சி பாதித்த விவசாய நிலங்களு க்கு குறைந்தளவே நிவா ரணம் அறிவிக்கப்பட்டுள் ளது. இதனால் மறு கணக்கெடுப்பு நடத்த வேண்டு மென விவசாயிகள் கோரிக் கை விடுத்துள்ளனர். 2012-13ம் ஆண்டு வறட்சியாலும், கர்நாடகத்திலிருந்து தண்ணீர் கிடைக்காததாலும் சம்பா சாகுபடி காலம் கடந்து துவங்கப்பட்டது. பருவமழையும் பொய்த்துபோனதால் வறட்சியில் சிக்கி சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு உதவுவதற்காக சம்பா சிறப்பு திட்டத்தின்கீழ் இன்சூரன்சுக்கான பிரீமியத்தொகை யை தமிழக அரசே ஏற்று செலுத்தியது. அதே நேரத் தில் வணிக வங்கிகள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், ஒரு சில கூட்டுறவு வங்கிகளில் விவசாய நகைக்கடன் மற்றும் இதர விவசாய கடன் பெற்றவர்களுக்கும் இன்சூரன்ஸ் பிரீமியம் பிடித்தம் செய்து காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது.

மேலும் நிலமில்லாதவர்கள், குத்தகை சாகுபடியில் ஈடுபடாதவர்களுக் கும் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதற்கென பிடித்தம் செய்யப்பட்ட பிரீமியத்தொகையும் பயிர் காப்பீடு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது. இதன் விளைவாக தமிழகத்தின் சாகுபடி பரப்பளவைவிட இரண்டு மடங்கு கூடுதலான சாகுபடி பரப்பளவாக காப்பீட்டு நிறுவனத்தில் பதிவாகிவிட்டது. இந்நிலையில் தமிழகத்தில் பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகை ரூ.740 கோடியென நிர்ணயித்து அதன் விபரத் தை கடந்த சில மாதங்களு க்கு முன் பயிர் காப்பீட்டு நிறுவனம் அறிவித்தது. தமிழக அரசு தனது முழுமை யான பங்குத்தொகையை விடுவித்தவுடன் நிவாரணம் வழங்கப்படும் என்றும் அறிவித்தது. இந்நிலையில் தமிழக அரசு சாகுபடி நிலப்பரப் புக்கு உரிய பங்குத்தொகை யை பயிர் காப்பீடு நிறுவனத்திற்கு செலுத்தியது. கூடுதலாக பதிவு செய்யப்பட்ட நிலங்களுக்கான பங்குத்தொகை யை செலுத்தவில்லை. மேற்கண்ட குளறுபடிகளால் 2012-13ம் ஆண்டுக்கான இழப்பீட்டுத்தொகையை வழங்குவதில் காப்பீடு நிறுவனம் காலங்கடத்தி வருவதை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்தினர்.

இந்த பிரச்னையை முடிவுக்கு கொண்டுவர பிரீமியம் செலுத்திய அனைவருக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழக அரசு செலுத்தியுள்ள பங்குத்தொகையை கணக்கிட்டு அதன்மூலம் கிடைக்கும் நிவாரணத்தொகையை அனைத்து விவசாயிகளுக்கும் பிரித்து வழங்க காப்பீட்டு நிறுவனம் முடிவு செய்து தற்போது மறுகணக்கெடுப்பு நடத்தாமல் ஒரு பாதிப்பு சதவீத கணக்கீட்டை வெளியிட்டுள்ளது. மேலும் அதற்கான இழப்பீட்டுத்தொகை ரூ.641 கோடியை

விடுவித்துள்ளது. இது தமிழக அரசு செலுத்திய பங்குத்தொகைக்கு மட்டும் கணக்கிடப்பட்டு அதில் 83.8 சதவீத தொகை மட்டும் தான். மீதமுள்ள சுமார் ரூ.100 கோடி பங்குதொகை யை தமிழக அரசு செலுத்திய பின்னர் விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத் தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இழப்பீடு சதவீதத்தைவிட குறைவான சதவீ தம் தான் பாதித்துள்ளதாக எந்த ஆதாரமுமின்றி தன்னிச்சையாக புதிய பட்டியலை பயிர் காப்பீடு நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில் பல வருவாய் கிராமங்களில் பாதிப்பு சதவீதம் குறைத்து காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக கோட்டூர் 10 சதவீதம், மன்னார்குடி 18, முத்துப்பேட்டை 25, உள்ளிக்கோட்டை 21, நீடாமங்கலம் 9, பாளையூர் 21 சதவீ தம் என பாதிப்பு சதவீதம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த குறைந்த மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.238.53 கோடி பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வரப்பெற்றுள்ளது. எனவே தமிழக அரசு, உண்மையில் சாகுபடி செய்து பாதித்த விவசாயிகள் பற்றி மறுகணக்கெடுப்பு நடத்தி இழப்பீட்டை பெற்றுத்தர வேண்டு மென விவசாயிகள் கோரிக் கை விடுத்துள்ளனர்.

இதுபற்றி விக்கிரபாண்டியம் சோமு, பாலசுப்பிரமணியன், வாஞ்சியூர் ராஜேந்திரன், எடமேலையூர் கோதண்டராமன் மற்றும் விவசாயிகள் கூறியது: விவசாய தொழில் வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றத்தால் தொடர்ந்து பாதித்து வருகிறது. இந்நிலையில் கவனமாக செய்யப்பட வேண்டிய பணி களில் அலட்சியம் காட்டியதால் தான், பயிர் காப்பீடு செய்துள்ளதில் குளறுபடிகள் நடந்துள்ளன. மறுகணக்கெடுப்பு நடத்தாமல் காப்பீடு நிறுவனம் தனது கடமையை செய்து முடிப்பதற்காக பிரீமியம் பெற்றுள்ள அனைவருக்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் பாதிப்பு சதவீதத்தை குறைத்துள்ளது. இந்த நடவடிக்கையை காப்பீட்டு நிறுவனம் கைவிட வேண்டும். என்றனர்.

## தமிழக பால் உற்பத்தியில் திண்டுக்கல் மாவட்டம் முதலிடம் அமைச்சர் விசுவநாதன் தகவல்

திண்டுக்கல், : தமிழக பால் உற்பத்தியில் திண்டுக்கல் மாவட்டம் முதல் இடம் வகிப்பதாக மின்சாரத்துறை அமைச்சர் விசுவநாதன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் தரமான பால் வழங்கிய கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். மாவட்ட ஆவின் சேர்மன் திவான்பாட்ஷா முன்னிலை வகித்தார். ஆவின் பொது மேலாளர் தில்லைநடராஜன் வரவேற்றார்.

தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் விசுவநாதன் கலந்து கொண்டு சிறந்த பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டு சான்றிதழ் வங்கி பேசியதாவது:

''தமிழகத்தில் வெண்மைப் புரட்சி ஏற்படுத்த பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். பால் உற்பத்திக்கு செலவு அதிகரித்துள்ளதை அறிந்து உற்பத்தியாளர் நலனை கருத்தில் கொண்டு கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தப்பட்டு உள்ளது. அதனால் பொது மக்கள் வாங்கும் பாலின் விலை உயர்த்தப்படவில்லை. இதனால், அரசுக்கு ஆண்டுக்கு ரூ.30 கோடி கூடுதல் செலவினம் ஏற்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் திண்டுக்கல், பழநி மற்றும் கொடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்களை உள்ளடக்கி கடந்த 1987ம் ஆண்டு முதல், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்பட்டு வருகிறது. தற்போது, இந்த ஒன்றியம் நாள் ஒன்றுக்கு 42 ஆயிரத்து 523 லிட்டர் பால் கொள்முதல் செய்கிறது. 47 ஆயிரத்து 778 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் 21 ஆயிரத்து 618 பேர் பெண்கள். தமிழகத்தில் பால் உற்பத்தியில் திண்டுக்கல் மாவட்டம் முதலிடம் வகிக்கிறது'' என்றார்.

விழாவில், எம்எல்ஏ வேணுகோபால், நகராட்சி தலைவர் மருதராஜ், நகர செயலாளர் பாரதிமுருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பயிர் காப்பீடு வழங்க கோரி ஆர்ப்பாட்டம்

பழநி, : பழநி அருகே தொப்பம்பட்டியில் பயிர் காப்பீட்டு தொகையை வழங்க கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பழநி அருகே உள்ள சரவணபட்டி, தும்பலப்பட்டி, பொருளூர், கொத்தயம், போடுவார்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, வடபருத்தியூர், கள்ளிமந்தையம் உள்ளிட்டப் பல பகுதிகளில் மக்காச்சோளம், பருத்தி மற்றும் கரும்பு பயிரிட்ட விவசாயிகளுக்கு அரசு வழங்க வேண்டிய பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இதை உடனடியாக வழங்க கோரி விவசாயிகள் தொப்பம்பட்டியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஒன்றிய செயலாளர் வேலுச்சாமி தலைமை வகித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒன்றிய செயலாளர் ராமசாமி முன்னிலை வகித்தார். சச்சிதானந்தம் சிறப்புரை ஆற்றினார். சம்பவ இடத்திற்கு விரைந்த தாசில்தார் பாலசுப்பிரமணியம் விவசாயிகளிடம் கோரிக்கைகளை மனுவாக கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். இதனைத்தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

### பசும்பால் உற்பத்தி பயிற்சி பெற அழைப்பு

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஜன. 21-ம் தேதி நடைபெறவுள்ள பசும்பால் உற்பத்தி பயிற்சி பெற அழைப்பு விடுத்துள்ளார் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. வெங்கடேசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், இயற்கை வேளாண்மையின் கீழ் சுத்தமான பசும்பால் உற்பத்தி என்ற தலைப்பில் ஜன. 21-ம் தேதி காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை இலவச பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. இதில், லாபகரமான பசும்பால் உற்பத்தி, இயற்கை வேளாண்மை மூலம் பால் உற்பத்தி மற்றும் அதற்கான சந்தை வாய்ப்பு, ஊறுகாய் புல் தயாரித்தல் உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்று பயன்பெறலாம். எனவே, பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் தங்களது பெயர் மற்றும் முகவரியை நேரில் அல்லது 04328 - 293592, 293251 ஆகிய எண்களில் தொடர்புகொண்டு முன் பதிவு செய்து கொள்ளலாம்.

கறிக்கோழி பண்ணைகொள்முதல் விலை நிலவரம்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. வியாழக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.87 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால், வெள்ளிக்கிழமை கொள்முதல் விலை கிலோ ரூ.89 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.45, சென்னையில் ரூ.3.80.

### கறிக்கோழி விலை உயர்வு

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

புதன்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 80 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் வியாழக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 87 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## ஓசூர் உழவர் சந்தையில் காய்கறி விற்பனை ‘ஜோர்’: பொங்கல் வர்த்தகத்தால் விவசாயிகள் மகிழ்ச்சி

பொங்கல் விழாவை முன்னிட்டு சில நாட்களாக ஓசூர் உழவர் சந்தையில் அதிக அளவில் காய்கறிகள் விற்பனையாகின.

தமிழகத்தில் திருப்பூர் உழவர் சந்தையில்தான் தினந்தோறும் அதிக அளவில் காய்கறி, பழங்கள் விற்பனையாகும். அதற்கு அடுத்தபடியாக ஓசூர் உழவர் சந்தையில் நாளொன்றுக்கு 100 டன்னுக்குக் குறையாமல் காய்கறி, பழ வர்த்தகம் நடக்கும். விழாக் காலங்களில் ஓசூர் உழவர் சந்தையில் வழக்கத்தை விட கூடுதலாக காய்கறிகள் விற்பனையாகும்.

அந்த வகையில், கடந்த திங்கள்கிழமை முதல் நேற்று வரை பொங்கல் விழாவையொட்டி ஓசூர் உழவர் சந்தையில் அதிக அளவில் காய்களி, பழங்கள் விற்பனையாகின.ஓசூர் உழவர் சந்தையில் தினமும் 70-க்கும் மேற்பட்ட வகைகளைச் சேர்ந்த காய்கறி, பழங்கள் விற்பனையாகும். திங்கள்கிழமையும் வழக்கமாக விற்பனைக்கு வரும் தக்காளி, கத்தரி, வெண்டை, பீர்க்கன், கேரட், பீட்ரூட், பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகளுடன், விழாக்கால சிறப்புப் பொருளான சர்க்கரை வள்ளிக்கிழங்கு 3.5 டன்னும், மொச்சை அவரை 3.75 டன்னும் விற்பனைக்குக் குவிக்கப்பட்டது. மேலும், காப்புகட்டும் பூ, செங்கரும்பு ஆகியவையும் விற்பனை செய்யப்பட்டன.

வழக்கமாக 250 விவசாயிகள் விளை பொருட்களை விற்பனை செய்ய உழவர் சந்தைக்கு வருவர். ஆனால் 13-ம் தேதி 312 விவசாயிகள், தங்கள் பொருட்களை விற்க உழவர் சந்தைக்கு வந்திருந்தனர். அன்று 122 டன் அளவுக்கு காய்கறி, பழங்கள் விற்பனையானது. சாதாரண நாட்களில் ரூ.15 முதல் ரூ.16 லட்சம் வரை வர்த்தகம் நடக்கும். ஆனால் 13-ம் தேதி ரூ.19 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. அதேபோல 14-ம் தேதி ரூ.17 லட்சம் மதிப்பிலான 114 டன் விளை பொருட்கள் விற்பனையாகின என்று உழவர் சந்தை நிர்வாக அலுவலர் மேகநாதன் தெரிவித்தார்.

### மல்லிகை கிலோ ரூ.1,000

பொங்கல் விழாவின்போது மல்லிகைப் பூ அதிக விலைக்கு விற்பனையாகியது. ஏறத்தாழ ஒரு கிலோ ரூ.1,000-க்கு விற்பனையானது. தக்காளி, கத்தரி, வெண்டை ஆகியவை கிலோ ரூ.3 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்பட்டது. கடந்த இரு வாரங்களாக மொச்சை அவரை அதிக அளவில் விற்பனைக்கு வந்தது. ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே

கிடைக்கும் காய் என்பதால் வாடிக்கையாளர்கள் அதிக அளவில் வாங்கினர். மொச்சை அவரை கிலோ ரூ.20-க்கு விற்கப்பட்டது.

**வீட்டு மாடி காய்கறி தோட்டமானது**

மதுரை, : மதுரை ஒத்தக்கடையில் வீட்டு மாடியில் தோட்டம் அமைத்து காய்கறி விளைவிக்கப்படுகிறது. இதில் நல்ல பலன் கிடைப்பதாக உரிமையாளர் கூறுகிறார். மதுரை ஒத்தக்கடை ராஜிவ் நகரில் வசிப்பவர் முத்துராமலிங்கம் யோகீஸ்வரர். பில்டிங் காண்டிராக்டர். இவரது வீடு மாடிகளை கொண்டது. 2வது மாடியில் குடும்பத்துடன் வசிக்கும் முத்துராமலிங்கம், 3வது மாடியில் பூச்செடி வளர்க்க நினைத்து தொட்டி கட்டினார். நான்காவது மாடியில் உள்ள குடிநீர் தொட்டியில் நிரம்பி வழியும் தண்ணீர் பூத்தொட்டியில் விழும்படி செய்தார்.முதலில் பூச்செடி மட்டும் வளர்க்க ஆசைப்பட்டவர், புடலை விதையை ஊன்றி உள்ளார். வீடு கட்டி மிச்சமான கம்பிகள், கம்புகளை வைத்து பந்தல் போட்டார். புடலங்காய் காய்த்து தொங்குவதை பார்த்து மகிழ்ந்த அவர், மாடியை தோட்டமாக மாற்ற நினைத்தார். விதை பக்கெட்டுகளை வாங்கி வெண்டை, கத்திரி, மிளகாய், துவரை, தக்காளி விதைத்தார். அவைகளும் எதிர்பார்த்தபடியே காய்த்து குலுங்குகின்றன. பூச்செடிக்காக வைக்கப்பட்ட தொட்டிகளில் கீரை, மல்லி, புதினா, வெள்ளரி, பீர்க்கங்காய் பயிரிட்டார். இந்த செடிகள் அழகாய் வளர்ந்து பலன் தந்தன. 4வது மாடியில் தண்ணீர் தொட்டி அருகே பூசணி வளர்ந்து காய் வந்துள்ளது. இதற்காக சொட்டுநீர் பாசன முறைபோன்ற ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. மாடி செடிகளுக்கு போக மிச்சமாகும் தண்ணீர், கீழே பூமிக்குள் மழை நீர் சேகரிப்பு பள்ளத்தில் விழுமாறு செய்யப்பட்டுள்ளது. மாடி தோட்டம் அருகே பிரமாண்டமான மீன் தொட்டி கட்டி, அதில் கண்மாய் மீன்களை வளர்த்து வருகிறார். மீன்களை பாதுகாக்க தொட்டியை சுற்றி இரும்பு கூண்டு கட்டப்பட்டுள்ளது. இந்தக் கூண்டு பறவைகளின் கூடமாக மாறியுள்ளது. முத்துராமலிங்கம் கூறுகையில், `மாடியில் தோட்டம் போடுவதை சாதாரணமான தொடங்கினேன். இன்று விடமுடியாமல் ஒன்றிப்போய் உள்ளேன். 2 நாளுக்கு ஒரு முறை 6 முதல் 7 கிலோ கத்திரி, ஒரு கிலோ தக்காளி, ஒன்றை கிலோ வெண்டை கிடைக்கிறது. கீரை, புதினா, மல்லியும் தேவைக்கேற்ப கிடைக்கிறது. இவற்றை வீட்டு உபயோகத்திற்கும், பக்கத்து வீடுகளுக்கும் கொடுப்பேன். மீதியிருந்தால் கடைகளுக்கு விற்பேன். விவசாய கல்லூரியில் விதை வாங்கி பக்கெட்டில் செம்மண், மண் புழு உரம் கலந்து விதைத்தால் நல்ல பலன் கிடைக்கும். விளை நிலங்களின் பரப்பளவு குறைந்து, வீட்டடி மனைகளாக மாறிவரும் நிலையில், வீட்டு மாடிகளில் தோட்டம் வளர்த்து காய்கறி உற்பத்தியை பெருக்கலாம் என்றார்.